**செய்தி வெளியீடு எண்: 245** **நாள்: 01.04.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு அம்மாவின் அரசு, கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் எடுத்து வருகிறது. தமிழ்நாடு அரசுக்கு தோள் கொடுக்கும் விதமாக பொதுமக்களும், நிறுவனங்களும், அமைப்புகளும் கொரோனா வைரஸ் நோய் நிவாரண நடவடிக்கைகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தங்களின் பங்களிப்பை மனமுவந்து அளித்து வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக, **தற்போது HCL நிறுவனம், 37.5 கோடி ரூபாய் மதிப்புள்ள 500 வெண்டிலேட்டர்களை கொரோனா வைரஸால் உண்டாகின்ற மருத்துவ சிகிச்சைக்காக தமிழ்நாடு அரசுக்குத் தர முன்வந்துள்ளது.** சூழ்நிலை கருதி, HCL நிறுவனம் செய்த இந்த உதவிக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள், தமிழ்நாடு மக்களின் சார்பாக தனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**